DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 128/2016 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மாரிஸ்வரன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. செல்லமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 absent. u/s 355 BNSS petition filed and allowed. A2 present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 23.06.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். 06.01. 2015 வருடம் திருவாடானை உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்தபோது வட்டானம் பகுதியில் உள்ள SMJ ஸ்டோர்ஸ் என்ற கடைக்கு உணவு பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் உணவு மாதிரி எடுப்பதற்காக சென்றிருந்தேன். கடையில்இருந்த சேக்மஸ்தான் ராஜா என்பவரிடம்

கடையின் உரிமையாளர் பற்றி கேட்டபோது அவர் கடையின் உரிமையாளர் என்று கூறினார். அப்போது அங்கு வந்திருந்த சமயமுதது என்பவரிடம் சாட்சியாக இருப்பதற்கு கேட்டபோது சமயமுதது சம்மதித்தார். பின்னர் நான் யார் என்பதையும் நான் வந்த நோக்கத்தையும் கடையின் உரிமையாளரிடம் தெரியபடுத்தினேன்.

2.கடையின் உரிமம் பற்றி கேட்டபோது கடையின் உரிமம் எடுக்கவில்லை என்றுசொன்னார். நான் அங்கிருந்த மனித உணவு பொருளான ஓம்பிரான் கடலைமாவு என்ற உணவு பொருளை மாதிரியாக எடுக்க முடிவு செய்து அதில் இரண்டு கிலோக்கள்(4x500 grams) எனக்கு விற்பனை செய்யும் படிகேட்டுகொண்டேன். அதற்கு விலையான ரூ.200 யை அவரிடம் அளித்து அதற்கான ரசீதையும் பெற்று சாட்சியிடம் கையொப்பம் வாங்கி பத்திரப்படுத்தினேன். பின்னர் நான்கு பொட்டலங்களை தனிதனியாக பிரவுன் பேப்பர் கொண்டு கெட்டியாக நூலை வைத்து மடித்தேன்.நான்கு மாதிரிகளில் பூர்த்திசெய்யப்பட்ட லேபிளை ஒட்டி அதில் உரிமையளார் மற்றும் சாட்சியின் கையொப்பம் பெற்று அந்த மாதிரிகளின் மேல் ஒட்டினேன்.

3.மீண்டும்ஒரு பிரவுன் பேப்பரை கொண்டு அதை சுற்றிஒட்டினேன்,. அதன்மீது நியமன அலுவலரின் கையொப்பம் பெற்ற நீண்ட பேப்பர் சிலிப்பை ஒட்டினேன். அதில் 1/2015 என்ற எண்ணும் நியமன அலுவலரின் கோடு எண்ணான 017 என்பதும் எழுதப்பட்டிருந்தது. பின்னர் 4 மாதிரிகளிலும் பேப்பர்ஸ் சிலிப் மற்றும் பிரவுன் பேப்பரில் வருமாறு கடை உரிமையாளரிடம் கையொப்பம் பெற்றேன்.பின்னர் அதனை நான்கு பொட்டலங்களையும் தடித்த நூல் கொண்டு குறுக்கும் நெருக்குமாக சுற்றி அரக்கு கொண்டு எனது முத்திரை சீல்களை பதித்தேன். பின்னர் படிவம் VA எடுத்து பூர்த்திசெய்து 3 நகல்கள் தயாரித்தேன். அதில் ஒன்றினை உரிமையாளரிடம் கொடுத்து கையொப்பம் பெற்றேன். படிவம் A ல் உணவு மாதிரி எடுத்த விவரம் உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

4.பின்னர் நடந்த நிகழ்வுகளை ஒரு காகிதத்தில்எழுதி அதில் உரிமையாளர் மற்றும் சாட்சியின் கையொப்பம் பெற்று பத்திரப்படுத்தினேன். பின்னர் படிவம் VA

ஆறுபடிவங்களை எடுத்து பூர்த்திசெய்து அத்துடன் முத்திரை சீல் இட்ட நகல் ஒன்றினையும் இணைத்து நான்கு உணவு மாதிரிகளிலும் வைத்தேன்.அதில் ஒரு மாதிரியினை 06.01.2025 அன்று பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் பாளையங்கோட்டை ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும் உரிமையாளருக்கு ஒரு மாதிரியினை Accrediated lab க்கு சோதனைக்கு அனுப்புவதற்கு விருப்பம் உள்ளதா என்று கேட்டேன். அவர்விருப்பம் இல்லை என்று தெரிவத்தார். அதனை ஒரு படிவத்தில் எழுதி அவரிடம் கையொப்பம் பெற்றேன்.

5.படிவம் VI மற்றும் முத்திரை தாள் படிவம் கொண்ட கவரினை பூட்டி சீல் இட்டு தனியாக பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பினேன்., மீதமுள்ள 3 மாதிரிகளையும் ஒரு மரப்பெட்டியில் வைத்து சீல்இட்டு 07.01.2025 அன்று நியமன அலுவலரிடம் அளித்து அதற்கான ஒப்புகையையும் பெற்றேன். பின்னர் பூர்த்திசெய்யப்பட்ட படிவம் 5 எ யினை உணவு பொருள் தயாரிப்பாளரான சரவணன் டிரேடர்ஸ் மதுரை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். உணவு பகுப்பாய்வு அலுவலரிடமிருந்து பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு நியமன அலுவலர் மூலம் எனக்கு அளிக்கப்பட்டது. அதில் உணவு மாதிரி unsafe misbranded substanded என்று கூறப்பட்டிருந்தது. அவ்வறிக்கைகள் உணவு பொருள் தயாரிப்பாளருக்கும் உணவு பொருள் விற்பனையாளருக்கும் பதிவு அஞ்சல்மூலம் அனுப்பப்பட்டது.

6.உணவு பொருள் விற்பயையான SMJ மளிகை உரிமையாளர் அதனை மறுப்பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் Referal Labartory அனுப்பக்கோரி விண்ணபித்தார். அதனடப்படையில் நியமனஅலுவலர் ஒருபகுதி உணவு மாதிரியினை கல்காத்தாவில் உள்ள உணவு பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தார்.அங்கிருந்து பெறப்பட்ட அறிக்கையிலும் அந்த உணவு பொருளானது unsafe misbranded substanded என்று அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கைகள் உணவு தயாரிப்பாளர் மற்றும் விற்பனையாளர் இருவருக்கும்அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர் சம்மந்தப்பட்ட இருவர் மீதும் வழக்கு தொடரவேண்டி உரிய ஆவணங்களுடன் ஆணையர் உணவு பாதுகாப்பு துறை சென்னை அவர்களுக்கு நியமான அலுவலர் மூலம் அனுமதிகோரி அனுப்பப்பட்டது. ஆணையர் அவர்களிடமிருந்து சரவணன் டிரேடர்ஸ் உரிமைளயார்

மீது உரிய ஆவணங்களுடன் வழக்கு பதிவு செய்யுமாறு அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் உரிய ஆவணங்களுடன் மாண்புமிகு நீதிமன்றத்தில் என்னால் வழக்கு தொடரப்பட்டது.

7. படிவம் VA அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது., உணவு பொருள்களை மாதிரிக்காக வாங்கியதற்கான ரசீது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது., விற்பனையாளரிமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது., தரம் உயர்த்தப்பட்ட ஆய்வகத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டாம் என்று கடையின் உரிமையாளர் கொடுதத கடிதம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது., உணவு பகுப்பாய்வாகத்திற்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்ட படிவம் 6 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.,

8.உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்ட முத்திரை படிவம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது., பாளையங்கோட்டை பகுப்பாய்விற்கு உணவு மாதிரிகளை அனுப்பியதற்கான அஞ்சல் ரசீது அ.சா.ஆ.7 ஆகவும் அதற்கான ஒப்புதல் அஞ்சலக அட்டை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது., தயாரிப்பாளருக்கு அனுப்பப்பட்ட 5 எ படிவம் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதுமற்றும் ஒப்புதல அட்டை அ.சா.ஆ. 9, ஆக குறியீடுசெய்யப்படுகிறது., உணவு மாதிரிகளை எடுத்ததற்கான நியமன அலுவலருக்கு தெரிவித்ததற்கான படிவம் மற்றும் அதை நியமன அலுவலர் பெற்றுகொண்டற்கான ஒப்புதலுடன் அ.சா.ஆ.10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.,

9. பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடுசெய்யப்படுகிறது., மேற்படி பகுப்பாய்வு அறிக்கை தாயரிப்பாளர் மற்றும் விற்பனையாளருக்கு நியமன அலுவலர் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் அ.சா.ஆ.12 ஆக குறியீடுசெய்யப்படுகிறது., உணவு பொருள் தயாரிப்பாளரிமிருந்து உரிமையார் பற்றி கோரி அனுப்பப்பட்ட கடிதம் அஞ்சலக ரசீது அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது., தயாரிப்பாளரின் விவரங்கள் குறித்து அவர்கள் அளித்தஅறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.,

நியமன அலுவலரால் தரம் உயர்த்தப்பட்ட உணவு பகுப்பாய்வாகம் கல்கத்தாவிற்கு உணவு மாதிரிகள் அனுப்பியதற்கான கடிதம் **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது., கல்கத்தா உணவு பகுப்பாய்வகத்திலிருந்து பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.16 ஆக** குறியீடு செய்யப்படுகிறது., கல்கத்தாவிலிருநது பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையினை உணவுதயாரிப்பாளர் மற்றும் விற்பனையாளருக்கு அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது., உணவு பாதுகாப்பு துறை ஆணையாளர்டமிருந்து பெறப்பட்ட வழக்கு தொடர்வதற்கான அனுமதிகோர நியமன அலுவலர் மூலமாக நான் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உணவு பாதுகாப்பு துறை ஆணையாளர் வழக்கு தொடர்வதற்கான அனுமதி அளித்ததற்கான கடிதம் **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது., ,

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் B.Sc படித்துள்ளேன். நான் 2011 ஆண்டிலிருந்து 2020 ஆண்டு வரை உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றி வந்தேன். நான் திருவாடானை உணவு பாதுகாப்பு அலுவலராக பணியில் சேர்ந்து சில நாட்கள் சென்று சம்பவயிடத்திற்கு சோதனை செய்ய சென்றேன். உணவு பாதுகாப்பு அலுவலரின் கடமைகள் குறித்த முழுவிவரம் எனக்குதெரியும். நான் ஆய்வு மேற்கொள்ள சென்ற முகமதியார் ஸ்டோர் என்ற கடையானது தொண்டியில் பிரசித்தி பெற்ற கடை என்றால் சரிதான். எப்போதும் மேற்படி கடையில் வாடிக்கையாளர் கூட்டம் நிறைந்திருக்கும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

2. மேற்படி கடையானது மிகவும் பிரதான இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி கடையானது பெரிய கடை என்றும் அங்கு உணவு பொருள்கள் நிறைந்திருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவத்தன்று காலை 11 மணிக்கு ஆய்வுமேற்கொள்ள சென்றேன். நான் ஆய்வு மேற்கொள்ள செல்லுமபோது மேற்படி கடையில் 2,3 நபர்கள் பொருள் வாங்குவதற்கு வந்திருந்தார்கள். வழக்கை பொருத்தவரை நான் மேற்கொண்ட ஆய்வின் நேரடி சாட்சியாக சமயமுத்து என்ற நபர் இடம்பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேறப்டி சமயமுத்து நான் பணிபுரிந்த துறையில் சார்பாக அரசு மருத்துவமனையில் வேலை பார்த்து வந்த நபர் என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்படி சமயமுத்துவை தவிர வேறு பொதுநபர்களை சாட்சியாக

சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கேட்டேன் யாரும் முன்வரவில்லை. பொதுவாக கடையில் ஆய்விற்கு செல்லும்போது கண்பார்வையில் தென்படும் உணவை ஆய்விற்காக எடுத்து கொள்வது வழக்கம் என்றால் சரியல்ல.வழக்கில் நான் ஆய்விற்காக எடுத்துகொண்ட ஓம்சக்தி கடலை மாவு பாக்கெட் பார்வையில்படும்படி இருந்ததா அல்லது இல்லையா என்றால் பார்வையில் படும பட இருந்தது.

3.உத்தேசமாக எத்தனை ஓம்சக்தி கடலைமாவு பாக்கெடுகள் இருந்தது என்றால் சரியாக தெரியாது. ஆனால் பார்த்தவரை நிறைய பாக்கெட்டுகள் இருநத்து. அந்த பாக்கெட்டுகளை பார்த்தவுடன் அவை தரம் அற்ற பொருள் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டதா என்றால் சரிதான்.சந்கேதத்தின் அடிப்படையில் நான் சட்டமுறைபடி அதனை பகுப்பாய்விற்கு அனுப்பினேன் என்றால் சரிதான்.நான் எந்த பாக்கெட்டுகளை பகுப்பாய்விற்கு எடுத்தேன் என்று பாக்கெட்டின் கவரையோ அல்லது புகைப்படத்தையோ வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.படிவம் 7 A ஆவணத்தின் அடிப்படையில் தான் மேற்படி உணவானது தரம்அற்ற உணவு என்ற முடிவு எ டுத்தோம் என்றால் சரிதான்.

4. படிவம் 7 A அறிக்கையில் சரவணா டிரேடர்ஸ் முகவரி மற்றும் அந்தகடலை மாவானது தயாரிக்கப்பட்ட தேதி மற்றம் எ டை விவரங்கள் உள்ளது எ ன்றால் ச ரிதான். மேற்படி அறிக்கையின் அடிப்படையில் கடலைமாவானது 08 வது மாதம் 2014 ஆண்டு தயாரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேறப்டி அறிக்கையில் கடலை மாவு தயாரிக்கப்பட்ட தேதி இடம்பெறவில்லை என்றால் சரிதான். மேற்படிஅறிக்கையில் அந்த கடலைமாவினை தயாரிக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதத்திற்குள் உபயோகித்து விடவேண்டும் அல்லது காலவாதியாகிவிடும் என்ற எச்சரிக்கை குறித்தவிவரம் இடம்பெற்றுள்ளது என்றால்சரிதான்.

5. மேற்படி ஆய்வறிக்கையின் அடிப்படையில் அந்த கடலை மாவானது 01.08.2014 தேதி தயாரிக்கப்பட்டு இருந்தால் கூட 31.10.2014 ம் தேதி காலவாதியாகிவிடும் என்றால் சரிதான். நான் 06.01.2015 தேதி மேற்படி கடைக்கு ஆய்விற்கு சென்றேன் என்றால் சரிதான். வழக்கில் கண்ட உணவு பொருள் காலவாதியாகி சுமார் 67 நாட்கள் சென்று

தான் நான் வழக்கில் கண்டுள்ள கடைக்கு ஆய்வு மேற்கொள்ள சென்றேன் என்றால் சரிதான். உணவு பாதுகாப்பு அலுவலராக உணவு பொருளின் காலவாதி தேதியை பார்க்காமல் ஆய்வுசெய்தது சட்டப்படி குற்றம் என்றால் சரியல்ல. உணவு பாதுகாப்பு அலுவலர் காலவாதியான உணவை விற்பனைக்கு வைத்திருப்பதை கண்டறிந்தால் அந்த உணவினை அழிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

6. நான் பகுப்பாய்விற்கு அனுப்பிய பொருளானது காலவாதியான பொருள் என்றால் சரிதான். காலவாதியான பொருளை கடைக்காரர் விற்றால் அது சட்டப்படி குற்றம் என்றால் சரிதான். மேற்படி குற்றத்திற்கு கடைக்காரர் மீது தனியாக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். நான் கடைக்காரர் மீது மேற்படி குற்றத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவுசெய்துள்ளேன். நான் எனது மேல்அதிகாரியிடம் அறிக்கை அனுப்பும்போது காலவாதியான உணவை விற்றார் என்று குறிப்பிட்டு அறிக்கை அனுப்பவில்லை என்றால் சரிதான். முகமதியா ஸ்டோர்ஸ் கடைக்காரரிடமிருந்து அவர் ஓம்சக்தி பிரான்ட் கடலை மாவினை மொத்தமாக யாரிடமிருந்து வாங்கினார் என்பதற்கான ரசீதை வாங்கி தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

7.கல்கத்தாவிற்கு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்ட உணவு பொருளும் காலவாதியான உணவுபொருள் என்றால் சரியல்ல. இவ்வழக்கை பொருத்தவரை கடையின் விற்பனையாளர் முதல் குற்றவாளி என்றால் சரிதான். வழக்கில் உணவு பாதுகாப்பு துறை ஆணையர் விற்பனையாளரை நீக்கிவிட்டு கடலைமாவின் உற்பத்தியாளர் மீது மட்டும் வழக்கு நடத்தஅனுமதி அளித்துள்ளார் என்றால் சரிதான். கடையின் விற்பனையாளரை நீக்கியதை குறித்து நான் மேல்அதிகாரிகளுக்கு முறையிட்டு கடிதம் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்,. அதற்கான உரிமை எனக்கு இல்லை. நான் கடைக்குள் சென்று கணக்கு வழக்கு பதிவேடுகளை சரிபார்த்ததாக இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடலைமாவின் தயாரிப்பாளரை வரவழைத்து அவரின் கணக்கு வழக்கு விவரங்களையும் சரிபார்க்கவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி வருடத்திற்கு ஒரு லட்சம் வருமானம் ஈட்டுகிறார் என்று எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் எனது அனுமானத்தில் தெரிந்துகொண்டேன்., கடலை

மாவின் தயாரிப்பாளருக்கு நான் கடிதம்அனுப்பி அவர் காலவாதியான உணவு பொருளை நான் பகுப்பாய்விற்கு அனுப்பிய விவரத்தை எனக்கு பதில் கடிதம் மூலம் தெரிவித்தார் என்றால் சரியல்ல.

8. இவ்வழக்கில் முதலாம் எதிரியாக உள்ள கடலைமாவு உற்பத்தியாளர் சண்முககனிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல,. எதிரி சண்முககனி எனக்கு அனுப்பிய பதில் உரையானது எனது முதல்விசாரணை சாட்சியத்தில ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கை பொருத்தவரை நானும் கடையின் விற்பனையாளரும் குற்றம் புரிந்துள்ளோம் என்றால் சரியல்ல. காலவதியான உணவை கண்டறிந்ததும் அழிக்கவேண்டும் என்ற சட்டவிதியின் படி நான் செயல்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது சட்டபூர்வமாக நிலைநிற்கத்தக்க வழக்கில்லை என்றால் சரியல்ல. தயாரிப்பாளர்தான் கடலைமாவை தயார்செய்தார் என்பதை நிரூபிக்கும் விதமான ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9.,நான் உணவு துறை விதிகள் குறித்த புரிதல் இல்லாமல் சாட்சியம் அளிப்பதால் வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும்எ ன்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் பகுப்பாய்விற்கு சென்ற இரண்டாம் எதிரி கடையானது தொண்டியில் நீண்டகாலமாக இயங்கி வரும் கடை என்றால சரிதான். மேற்படி கடையில் தரமற்ற உணவு விறபனை செய்வதாக சொல்லி பொதுமக்கள் யாரும் எங்களது துறைக்கு புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பகுப்பாய்விற்காக கடையிலிருந்து எடுத்த 4 மாதிரிகளும் Seal செய்யப்பட்ட பாக்கெடுகள் என்றால்ச ரிதான். நான் இந்த வழக்கை உணவின் தயாரிப்பாளர் மீது நீதிமன்றத்தில் தாக்கல்செய்தேன் என்றால் சரிதான். நான் ஆய்விற்குசென்ற கடையில் பெரும்பான்மையான உணவு பொருள்கள் Seal செய்யப்பட்ட கவரில் தான் இருக்கும் என்றால் சரிதான். நான் தயாரிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தின் பேரில் அவர் எனக்கு அனுப்பிய பதிலில் உணவு பொருளின் தயாரிப்பாளர் என்ற முறையில் எனக்கு பதில் அனுப்பினார் என்றால் சரிதான். தாயரிப்பாளர் தொண்டியில் உளள SMJ கடைக்கும் தனக்கும் சம்மந்தம் இல்லை என்றும் அந்த கடைக்கு பொருள்கள் கொடுத்ததில்லை என மறுத்து பதில்

அளிக்கவில்லை என்றால் சரிதான். கடலைமாவினை தாங்கள் தயாரிக்கவில்லை என்று மறுத்து தயாரிப்பாளர் பதில் அளிக்கவில்லை என்றால் ச ரிதான்.

2. உற்பத்தியாளரிடமிருந்து விற்பனையாளருக்கு விநியோகிகப்பட்ட கடலைமாவானது Seal செய்யபட்டுதான் கொடுக்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். From 7A படிவத்தில் கண்டுள்ள கடலை மாவானது தயாரிக்கப்பட்ட தேதியினை நிரூபிக்கும் வகையில் நான் வழக்கில் எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்ட கடலைமாவு பாக்கெட்டுகள் Seal செய்யப்பட்ட பாக்கெடுகள் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Seal செய்யப்பட்ட பாக்கெடுகளில் உள்ள உணவு பொருளை பொருத்துபொருளின் விற்பனையாளர் உணவு பாதுகாப்பு சட்டத்திற்கு புறம்பான எந்த செயலிலும் ஈடபடமுடியாது என்றால் பாக்கெடுகள் இருக்கும் உணவு பொருளை பொருத்து விற்பனையாளர் எ துவும் மாற்ற முடியாது.

3. நான் உணவு பகுப்பாய்விற்கு அனுப்பிய உணவின் தரத்தை பொருத்து அந்த உணவின் தயாரிப்பாளர் மட்டும் தான் பொறுப்பு என்றால சரியல்ல. விற்பனையாளரின் பொறுப்பு. நான் கடைக்கு ஆய்விற்கு சென்ற தேதியில் ஆஜர் இரண்டாம் எதிரி கடையின் உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் இரண்டாம் எதிரி SMJ முகமதியா கடையின் உரிமையாளர் என்பதற்கு அங்கீகாரம்பெற்ற ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆய்விற்குசென்ற தேதியில் மேற்படி கடையின் உரிமையளார் யார் என்று தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.ஆஜர் எதிரி காலவாதியான எந்த உணவு பொருளையும் தனது கடையில் விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதால் ஆஜர் எதிரியை கட்டாயப்படுத்தி அவர்மூலம் சில ஆவணங்களை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் 2 ம்எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court,interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.23 16:34:48 +0530

Judicial Magistrate,
Thiruvadanai.